# Action taken on the Water supply issues reported

| Date | District | Name of the Newspaper | Issues published |
|---|---|---|---|
| 1.6.2026 | HOSUR | DINAKARAN | Combined water supply pipeline leak causing water stagnation in roads |



0 1 JUN 2026

தினகரன்

தேன்கனிக்கோட்டை பைபாசில்

## கூட்டுகுடிநீர் குழாய் கசிவால் சாலையில் தேங்கிய தண்ணீர்


**விபத்து ஏற்படும் அபாயம்**

தேன்கனிக்கோட்டை, ஜூன் 1: கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை பைபாஸ் சாலை இணைப்பு பகுதியில், சாலையின் நடுவே ஒகேனக்கல் கூட்டுகுடிநீர் குழாய் செல்கிறது. கடந்த 15 நாட்களுக்கு முன், இந்த குடிநீர் குழாயில் கசிவு ஏற்பட்டு சாலையில் குழியாக மாறியுள்ளது. பைபாஸ் சாலையில் தினமும் பள்ளி, கல்லூரி வாகனங்கள், கனரக வாகனங்கள், தனியார் தொழிற்சாலை வாகனங்கள் என நூற்றுக்கும் மேற்பட்டவை செல்கின்றன. அப்பகுதியில், பல்வேறு வணிக நிறுவனங்கள் செயல்படுகின்றன. கூட்டுகுடிநீர் குழாய் உடைப்பால் சாலையில் பள்ளம் ஏற்பட்டு தண்ணீர் தேங்கி வருகிறது.

இதில், வாகனங்கள் குழியில் விடாமல் செல்ல முற்படும் போது எதிரே வரும் வாகனங்களில் மோதி விபத்து ஏற்படுகிறது. அதே போல், சந்தைபேட்டை, நெடுஞ்சாலை துறை அலுவலகம் அருகே கடந்த இரண்டு மாதங்களாக கூட்டு குடிநீர்குழாய் கசிவு ஏற்பட்டு சாலையின் நடுவே செல்கிறது. எனவே, கூட்டுகுடிநீர் குழாயில் ஏற்பட்டுள்ள உடைப்பபை அதிகாரிகள் சரி செய்ய முன்வரவில்லை. எனவே, விபத்து ஏற்படும் முன், 2 இடங்களில் ஏற்பட்டுள்ள கூட்டுகுடிநீர் குழாயை சரிசெய்ய வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

▸ தேன்கனிக்கோட்டை பைபாஸ் சாலையில், ஒகேனக்கல் கூட்டு குடிநீர் குழாய் கசிவால் சாலையில் குட்டை போல் தண்ணீர் தேங்கி உள்ளது.




**Damaged 350mm DI & 150mm DI Pipe leaks were rectified and water supply effected on 07.06.2026 under Hogenakkal Water Supply and Fluorosis Mitigation Project in Krishnagiri district**

# Action taken on the Water supply issues reported

| Date | District | Name of the Newspaper | Issues published |
|---|---|---|---|
| 02.06.2026 | THUTHUKUDI | DINAMALAR | People protesting with empty water pots |



## காலிகுடங்களுடன் வந்து மனு அளித்த கிராம மக்கள்


**தூத்துக்குடி, ஜூன் 2:** ஸ்ரீவைகுண்டம் அருகே உள்ள ராமானுஜம்புதூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்பில் கடந்த 2 மாதங்களாக குடிநீர் வினியோகிக்கப்படாத நிலையில், பாதிக்கப்பட்ட கிராம மக்கள் காலிகுடங்களுடன் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கருங்குளம் யூனியன் பகுதியில் அமைந்துள்ளது ராமானுஜம்புதூர் கிராமம். இங்குள்ள ஆதிதிராவிடர் குடியிருப்பில் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இங்கு ஒன்றிய அரசின் ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு உள்ளது. இதற்காக ஆண்டிற்கு ரூ.600 குடிநீர் கட்டணம் செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த 2 மாதங்களாக ராமானுஜம்புதூர் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் வழங்கப்படவில்லை. இதுகுறித்து பாதிக்கப்பட்ட பொதுமக்கள், வட்டார வளர்ச்சி அலுவலகத்தை தொடர்பு கொண்டு புகார் அளித்தனர். இதைத்தொடர்ந்து அதிகாரிகள் வீடுகளுக்கு வழங்கப்படும் குடிநீர் இணைப்பில் குடிநீர் வழங்காமல் தெருக்களில் உள்ள பைப்பில் ஆழ்துளை கிணறு மூலம் எடுக்கப்படும் தண்ணீரை வழங்கினர். ஆனால் இந்த தண்ணீர் உப்புநீராக இருப்பதால் பயன்படுத்த முடியாமல் மக்கள் பாதிக்கப்பட்டனர்.

இதையடுத்து பாதிக்கப்பட்ட பொதுமக்கள், தங்களுக்கு கருங்குளம் பகுதியில் இருந்து ஏற்கனவே குடிநீர் வழங்கப்பட்டது போன்று வீடுகளுக்கு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென காலி குடங்களுடன் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

பின்னர் மாவட்ட கலெக்டரிடம் மனு அளித்தனர். அப்போது அவர்கள் கூறுகையில், குடி தண்ணீர் கிடைக்காததால் ஒரு கேன் ரூ.35 வரை கொடுத்து வாங்கி குடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவித்தனர். மேலும் சாலை அமைப்பதிலும் தங்கள் பகுதியை அரசு நிர்வாகம் புறக்கணிப்பதாக அவர்கள் குற்றம்சாட்டினர்.




**EB transformer fault was rectified and water supply effected on 02.06.2026 under Karungulam CWSS in Tutucorin district**

# Action taken on the Water supply issues reported

| Date | District | Name of the Newspaper | Issues published |
|---|---|---|---|
| 05.06.2026 | KARUR | DINAMALAR | Million litres of water wasted daily |



தினமலர்

5 JUN 2026

## லட்சக்கணக்கிலான லிட்டர் காவிரி நீர் தினமும் வெளியேறி வீணாகும் அவலம்

### சரி செய்ய கோரிக்கை

அரவக்குறிச்சி, ஜூன் 5-

அரவக்குறிச்சி அருகே நங்காஞ்சி ஆற்றில் அமைக்கப்பட்டுள்ள காவிரி நீரேற்றத்தின் ராட்சத குழாயிலிருந்து நீர் வெளியேறி வீணாவதை உடனடியாக சரிசெய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரவக்குறிச்சி பகுதியில் குடிநீர் பஞ்சம் என்பது பெரிதாக சொல்லிக் கொள்ளும் நிலையில் இல்லை. தற்போது அரவக்குறிச்சி சுற்று வட்டார பகுதிகள் மட்டுமின்றி, திண்டுக்கல் மாவட்டத்தின் பாளையம், ஒட்டன்சத்திரம் உள்ளிட்ட பகுதிகளையும் ஒன்றிணைத்து பல இடங்களில் ராட்சத குழாய்கள் அமைத்து அரவக்குறிச்சியிலிருந்து 250 கி.மீ., தள்ளி உள்ள ராமநாதபுரம் மாவட்டத்திற்கு காவிரி குடிநீர் கொண்டு செல்லும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இதற்கென்று பைபாஸ் சாலையில் மிகப்பெரிய சம்ப் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ராட்சத கொள்ளளவு டேங்கிற்கு பல இடங்களிலிருந்து தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. இதனை கட்டுப்படுத்தும் ஓர் இடமாக கணக்குப்பிள்ளை புதுார் செல்லும் வழியில் உள்ள ஓடை பாலத்திற்கு கீழே அரவக்குறிச்சி நங்காஞ்சி ஆற்றிற்குள். பெரிய யானைக்குழாய் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் தினமும் லட்சக்கணக்கான லிட்டர் காவிரி நீர் நுரையுடன் பொங்கி வீணாகிறது. அவ்வழியே செல்வோர் தண்ணீர் வீணாவது கண்டு, இதனை சரிசெய்ய வேண்டும் என்ற நொந்தபடி கடந்து செல்கின்றனர்.

அரவக்குறிச்சி கணக்குப்பிள்ளைபுதுார் வழி ஓடைப்பால நங்காஞ்சி ஆற்றில் உள்ள யானைக்குழாயில் வீணாகும் காவிரிநீர்.

### அறிவுறுத்தியும் ஆக்ஷன் இல்லை

கடந்த மே 29ம் தேதி தான் டிஎன்பிஎல் கூட்டரங்கில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் தினேஷ்பொன்ராஜ் தலைமையில், கலெக்டர் முத்துக்குமரன் முன்னிலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் திட்டப்பணிகள், கூட்டுக் குடிநீர் திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடந்தது.

அதில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் செய்யப்பட்டு வரும் கூட்டுக் குடிநீர் திட்டங்கள், நீர் உந்து நிலையங்களில் புதிய உள்கட்டமைப்புகளை காலதாமதமின்றி முடிக்கவும், பணிகள் அனைத்தையும் போர்க்கால அடிப்படையில் முடித்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

ஆனாலும் அரவக்குறிச்சியில் மேற்கண்ட இடத்தில் லட்சக்கணக்கிலான லிட்டர் நீர் வீணாகப் போகிறது என்பது குறிப்பிடத்தக்கது.




குடிநீர் குழாய் நீர்கசிவு சரிசெய்யபட்ட புகைப்படம்

**Damaged 813 mm MS pipe was rectified and water supply effected on 05.06.2026 under RAMNAD CWSS in Karur district**

# Action taken on the Water supply issues reported

| Date | District | Name of the Newspaper | Issues published |
|---|---|---|---|
| 06.06.2026 | THIRUVANNAMALAI | DINAMALAR | Municipality vehicle held by the public ,demanding water |



செங்கம் நடுஆணைமங்கலம் பகுதியில் குடிநீர் தட்டுப்பாட்டை சரிசெய்யக்கோரி அப்பகுதி மக்கள் நகராட்சி வாகனத்தை முற்றுகையிட்டனர்.

## குடிநீர் கேட்டு நகராட்சி வாகனம் முற்றுகை

செங்கம், ஜூன் 6-


செங்கம் நகராட்சிக்கு உட்பட்ட நடு ஆணைமங்கலம் பகுதியில் கிட்டத்தட்ட 300 குடும்பங்கள் வசிக்கின்றனர்.

இப்பகுதியில் கடந்த ஒரு மாதமாக குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து அப்பகுதி மக்கள் நகராட்சி அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளனர்.

ஆனால், நகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என கூறப்படுகிறது. இப்போது அப்பகுதியில் கோயில் கும்பாபிஷேகமும், ஊர் திருவிழாவும் நடந்து வருகிறது.

திருவிழாவுக்காக, அப்பகுதியில் வசிப்பவர்களின் உறவினர்கள் சில நாட்களாக தங்கியுள்ளனர். அப்பகுதியில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவியதால், விவசாய நிலத்தில் இருந்து குடிதண்ணீரை எடுத்து வந்துள்ளனர்.

இந்நிலையில், நேற்று காலை 8 மணியளவில் நகராட்சி குடிநீர் அதிகாரி அப்பகுதியை பார்வையிட சென்றுள்ளார். அப்போது அப்பகுதி மக்கள் நகராட்சி வாகனத்தின் முன்பாக காலி பாத்திரங்களை வைத்து, முற்றுகையிட்டனர். பின்னர், நகராட்சி செயற்பொறியாளர், 'இப்பகுதியில் கடந்த 2 நாட்களுக்குள் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்' என உறுதியளித்துவிட்டு அங்கிருந்து வாகனத்தை எடுத்துச் சென்றார். இதனால், அப்பகுதியில் நேற்று காலை பரபரப்பு ஏற்பட்டது.




**Due to failure of borewells maintained by Chengam municpality and as per the municipal administration request,Water supply is being provided by TWAD Board to Chengam municipality, under Chengam,Pudupalayam TPs and 40 wayside habitations in Tiruvannamalai district**

# Action taken on the Water supply issues reported

| Date | District | Name of the Newspaper | Issues published |
|---|---|---|---|
| 08.06.2026 | THENI | DINAMALAR | CWSS pipe damaged in Cumbum |



தினகரன் 8/6/26

# கம்பத்தில் கூட்டுக் குடிநீர் குழாய் உடைப்பு

## 40 அடி உயரத்திற்கு பீய்ச்சி அடித்த தண்ணீர்

கம்பம், ஜூன் 8: கம்பம் மெயின் ரோட்டில் குடிநீர் குழாய் உடைந்து தண்ணீர் 40 அடி உயரத்துக்கு பீய்ச்சி அடித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

கம்பம் குமுளி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள தனியார் திரையரங்கில் பராமரிப்பு பணிகள் நடந்து வருகின்றன. தியேட்டரில் கழிவுநீர் கால்வாய்க்காக குழி தோண்டிய போது கோம்பை, பண்ணைப்புரம், தேவாரம் கூட்டு குடிநீர் திட்ட குழாய் உடைந்து தண்ணீர் 40 அடி உயரத்துக்கு பீய்ச்சி அடித்தது.

கூட்டு குடிநீர் விநியோக குழாய் திடீரென உடைந்ததால், அதிகளவில் தண்ணீர் வெளியேறியது. சாலையோரத்தில் நீர் அதிக அளவில் ஓடியதால் அப்பகுதி முழுவதும் வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகினர்.

கம்பம் பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வரும் சூழலில், கூட்டுக் குடிநீர் குழாய் உடைப்பால் ஆயிரக்கணக்கான லிட்டர் குடிநீர் வீணாகியது. சுமார் 2 மணி நேரத்திற்கு பிறகு கூட்டுக் குடிநீர் அதிகாரிகள் தண்ணீரை நிறுத்தினர்.

கம்பம் குமுளி மெயின் ரோட்டில் கூட்டுக் குடிநீர் திட்ட குழாய் உடைந்ததால் வீணாக வெளியேறும் தண்ணீர்.




**Damaged 350mm PSC pipeline was rectified and water supply effected on 07.06.2026 under Kombai, Pannaipuram Thevaram CWSS in Theni district**

## Action taken on the Water supply issues reported

| Date | District | Name of the Newspaper | Issues published |
|---|---|---|---|
| 08.06.2026 | VIRUDHUNAGAR | DINATHANTHI | Drinking water being wasted near Rajapalayam |



ராஜபாளையம் அருகே

# குழாய் உடைப்பால் வீணாகும் கூட்டுக்குடிநீர்

## சீரமைக்க வலியுறுத்தல்

ராஜபாளையம், ஜூன்.8-

ராஜபாளையம் அருகே குழாய் உடைப்பு காரணமாக தாமிரபரணி கூட்டுக்குடிநீர் வீணாக வெளியேறி வருகிறது. இதனை சீரமைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டு உள்ளது.

சொக்கநாதன் புத்தூர் செல்லும் சாலையில் குழாய் உடைந்து வீணாக வெளியேறும் குடிநீர்.

### குழாய் உடைப்பு

ராஜபாளையம் அருகே முகவூரில் இருந்து சொக்கநாதன்புத்தூர் கிராமத்திற்கு செல்லும் சாலை உள்ளது. இங்குள்ள மக்களுக்கு தேவையான குடிநீர் வழங்க இப்பகுதியில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் குழாய் பதிக்கப்பட்டு உள்ளது. தற்போது முகவூரில் இருந்து செல்லக்கூடிய சாலையில் குடிநீர் குழாய் உடைந்து பல இடங்களில் தண்ணீர் வீணாக சாலையில் செல்கிறது. இதனால் சாலை பல்வேறு இடங்களில் குண்டும், குழியுமாக காட்சியளிக்கிறது.

இதனால் இந்த பகுதியில் உள்ள பொதுமக்கள் பெரிதும் சிரமப்படுவதுடன் சிறு,சிறு விபத்துகளும் ஏற்படுகின்றன. இதுகுறித்து அப்பகுதி மக்கள் கூறுகையில், முகவூரில் இருந்து தாமிரபரணி கூட்டுக் குடிநீர் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக சொக்கநாதன்புத்தூர் செல்லும் சாலையில் குழாய் பதிக்கப்பட்டு உள்ளது. இந்த குழாய் மூலம் சொக்கநாதன் புத்தூர், தேவதானம், கோவிலூர் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு தேவையான குடிநீர் வழங்கப்படுகிறது.

### தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

அதேபோல குழாய் பதிக்கப்பட்ட இடத்தில் பல்வேறு இடங்களில் குழாய் உடைந்து தண்ணீர் வீணாக சாலையில் செல்கிறது. இதனால் பொது மக்களுக்கு தேவையான தண்ணீர் கிடைப்பதில் சிரமம் நிலவுகிறது. அத்துடன் சாலைகளும் சேதம் அடைந்து காணப்படுகிறது. தற்போது வெயில் வாட்டி வதைக்கும் வகையில் குடிநீர் வீணாவதால் இந்த பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயமும் உள்ளது.

எனவே சேதமடைந்த சாலையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சீரமைப்பதுடன் குடிநீர் குழாய் உடைந்து சாலையில் வீணாக தண்ணீர் செல்வதை தடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.






'தினத்தந்தி' செய்தி எதிரொலி:

# குடிநீர் குழாய் சீரமைக்கப்பட்டது

ராஜபாளையம், ஜூன்.10-

ராஜபாளையம் அருகே முகவூரில் இருந்து சொக்கநாதன் புத்தூர் செல்லும் சாலையில் தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டம் மூலம் பொது மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக குழாய் பதிக்கப்பட்டது. அந்த குழாய் உடைந்து தண்ணீர் வீணாக சாலையில் சென்றது.

இதுகுறித்து 'தினத்தந்தி'யில் செய்தி வெளியானது. அதன் எதிரொலியாக குடிநீர் குழாய் உடைப்பை சரிசெய்து பொது மக்களுக்கு குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதுகுறித்து உடன் நடவடிக்கை எடுத்த அதிகாரிகளுக்கும், செய்தி வெளியிட்ட 'தினத்தந்தி'க்கும் அப்பகுதி மக்கள் நன்றி தெரிவித்தனர்.

**Damaged 110mm PVC Pipe leak was rectified and water supply effected on 08.06.2026 under CWSS to 7 TPs and 395 RHs in Virudhunagar District**

# Action taken on the Water supply issues reported

| Date | District | Name of the Newspaper | Issues published |
|---|---|---|---|
| 08.06.2026 | RANIPET | DINAMALAR | Drinking water being wasted near Kaveripakkam |



காவேரிப்பாக்கம் அருகே

## குழாய் உடைந்து வீணாக வெளியேறும் குடிநீர்

காவேரிப்பாக்கம் அருகே திருத்தணி பகுதிக்கு செல்லும் குழாயில் உடைப்பு ஏற்பட்டு வீணாக வெளியேறிய குடிநீர்.

### சீரமைக்க கோரிக்கை

காவேரிப்பாக்கம், ஜூன் 8: காவேரிப்பாக்கம் அருகே வீணாக வெளியேறும் குடிநீரை சீரமைக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் அடுத்த திருப்பாற்கடல் மற்றும் அத்திப்பட்டு ஆகிய 2 கிராமங்களை ஒட்டி பாலாற்று படுக்கை அமைந்துள்ளது. இப்பகுதியில் இருந்து காஞ்சிபுரம், அரக்கோணம், திருத்தணி, பனப்பாக்கம், சிப்காட் காவேரிப்பாக்கம் பேரூராட்சி உள்ளிட்ட 80க்கும் மேற்பட்ட பகுதிகளுக்கு ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், திருத்தணி நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் மூலம், ரூ.109.68 கோடி மதிப்பீட்டில் பாலாற்றில் ஆழ்துளை கிணறு மற்றும் தரைமட்ட நீர்தேக்க தொட்டி அமைக்கப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இவை ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி மற்றும் மூலதன நிதி உதவி மூலம் செயல்படுத்தப்படுகிறது.

தற்போது காவேரிப்பாக்கம் அருகே திருத்தணி பகுதிக்கு செல்லும் குழாயில் உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் பீய்ச்சி அடித்து வீணாக வெளியேறி வருகின்றன. இதனால் இதன் அருகாமையில் உள்ள மின் சாதன பொருட்கள் மீதும் தண்ணீர் பீய்ச்சி அடிப்பதால், மின் கசிவு ஏற்பட்டு அசம்பாவிதம் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தில் பொது மக்கள் மற்றும் விவசாயிகள் இருந்து வருகின்றனர்.

மேலும் இப்பகுதியில் கால்நடைகள் மற்றும் மனிதர்கள் நடமாட்டம் அதிகமாக இருந்து வருகின்றன. எனவே அரசு அதிகாரிகள் விபரிதம் ஏற்படும் முன், வீணாக வெளியேறும் குடிநீர் சீரமைப்பு செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




**Damaged 80 mm air valve leak in the 300 mm MS pipe alignment was rectified and water supply effected on 08.06.2026 under CWSS to Sembedu and 88 other habitations in kaveripakkam, Sholingar & Arakonnam Union of Ranipet District**

# Action taken on the Water supply issues reported

| Date | District | Name of the Newspaper | Issues published |
|---|---|---|---|
| 09.06.2026 | TRICHY | DINAKARAN | Drinking water released into the river canal near Thuvarankuruchi |



துவரங்குறிச்சி அருகே

## ஆற்று வாரியில் திறந்து விட்டப்பட்ட குடிநீர்

பொதுமக்கள் வேதனை

துவரங்குறிச்சி, ஜூன் 9: திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சி அடுத்த பிள்ளையார்கோவில்பட்டி அருகே காவிரி கூட்டு குடிநீர் திட்ட குழாயில் கூட்டுக் குடிநீர் திட்ட ஊழியர்கள் தண்ணீரை திறந்து விட்டுள்ளனர்.

இதனால் ஆற்று வரியில் குடிநீர் வெள்ளப் பெருக்கெடுத்து கரைகளையும் தொட்டு ஆர்ப்பரித்து சென்றது. சுமார் அரை மணி நேரத்திற்கும் மேலாக தண்ணீர் திறந்து விடப்பட்டிருந்தால் பல லட்சம் லிட்டர் குடிநீர் வீணானது. இந்நிலையில் கொளுத்தும் கோடை வெயிலால் ஆங்காங்கே குடிநீர் தட்டுப்பாடு தலைவிரித்தாடி வரும் நிலையில், இதுபோன்று குடிநீர் வீணாவதை தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டார். ராட்சத குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டதால் அதனை சரிசெய்ய ஆற்றுவாரியில் திறந்து விடப்பட்டதாக தெரிவித்தனர். ஆனால் எந்த இடத்தில் உடைப்பெடுத்தது என சொல்ல மறுக்கின்றனர்.

→




**For fixing air valve along 1118mm MS pipeline alignment, scouring was done and closed immediately on 08.06.2026 under Ramnad CWSS ( New MVS)**

# Action taken on the Water supply issues reported

| Date | District | Name of the Newspaper | Issues published |
|---|---|---|---|
| 09.06.2026 | DINDIGUL | DINAMALAR | Drinking water being leaked for the past 15 days ; Officers being irresponsible |



## குழாய் உடைந்து 15 நாட்களாக வீணாகும் குடிநீர்

### கண்டுக்காத அதிகாரிகள்

**திண்டுக்கல், ஜூன் 9–** சிலப்பாடி பைபாஸ் சந்திப்பில் காவிரி குடிநீர் குழாய் சேதமடைந்ததால் வெளியேறிய குடிநீர் 15 நாட்களாக ரோட்டில் வீணாகும் நிலை உள்ளது.

என்.ஜி.ஓ., காலனி அருகே ரோட்டின் ஓரத்தில் மண் அள்ளும் இயந்திர வாகனங்கள் மூலம் பணிகள் நடந்து வருகின்றன.

இதில் பகிர்மான குழாய் சேதமடைந்தது. இதிலிருந்து வெளியேறும் தண்ணீர் ரோட்டில் வீணாகிறது.

அப்பகுதியை சேர்ந்த மக்கள் புகார் அளித்தும் நடவடிக்கை இல்லாததால் தொடர்ச்சியாக 15 நாட்களாக குடிநீர் வீணாகிறது.

அப்பகுதியை சேர்ந்த வினோத் கூறுகையில், ''15 நாட்களாக குடிநீர் வீணாகிறது. சீரமைக்க புகார் அளித்தும் கண்டு கொள்ளாமல் இருப்பதால் குடிநீர் வீணாகிறது'' என்றார்.

■ குழாய் உடைந்து ரோட்டில் வீணான குடிநீர்.

இடம்: என்.ஜி.ஓ., காலனி.




**Damaged 90 mm PVC pipeline was rectified and water supply effected on 09.06.2026 under Dindigul CWSS in Dindigul District**

# Action taken on the Water supply issues reported

| Date | District | Name of the Newspaper | Issues published |
|---|---|---|---|
| 10.06.2026 | TENKASI | DINAMALAR | Dungen formed due to damaged water pipeline ; Inconvienience for Vechicle users/riders in Alvaarkuruchi |



## குடிநீர் குழாய் உடைப்பால் ஆபத்து பள்ளம்

### ஆழ்வார்குறிச்சியில் வாகன ஓட்டிகள் அவதி

ஆழ்வார்குறிச்சி, ஜூன் 10–

ஆழ்வார்குறிச்சியில் ஆபத்தான வளைவில் ஏற்பட்டுள்ள குடிநீர் குழாய் உடைப்பால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆழ்வார்குறிச்சியில் அம்பாசமுத்திரம்–தென்காசி மெயின் ரோட்டில் தெப்பகுளம் உள்ளது. இந்த தெப்பகுளம் அருகே ரோட்டில் 2 வளைவுகள் உள்ளன. இருபுறமும் வரும் வாகனங்கள் சற்று அருகில் வந்தால் தான் தெரியும் அளவிற்கு உள்ளது.

இங்கு பஸ் ஸ்டாண்ட் உள்ளதால் பஸ்கள் பயணிகளை ஏற்றி இறக்கி செல்ல நிற்க வேண்டிய சூழ்நிலை உள்ளதால் எதிரே வரும் பஸ்கள் தெரிந்து கொள்ள வாய்ப்புள்ளது. இந்த ஆபத்தான வளைவில் கூட்டு குடிநீர்குழாய் மெயின் உடைந்து பள்ளம் ஏற்பட்டுள்ளது. இந்த பள்ளம் ரோட்டின் வளைவில் ஓரத்தில் இருப்பதால் வாகன ஓட்டிகளுக்கு பள்ளம் இருப்பதே தெரிவதில்லை. இதனால் வாகன ஓட்டிகள் வேகமாக பள்ளம் அருகில் வந்தவுடன் திடீரென பிரேக் பிடித்து நிலைதடு

ஏற்படுகிறது. குடிநீர்குழாய் உடைந்து வெளியேறும் தண்ணீர் கழிவு நீர் ஓடைக்கு திருப்பி விடப்பட்டுள்ளதால் ஏராளமான தண்ணீர் வீணாகிறது. உடனடியாக இந்த குடிநீர்குழாய் உடைந்த பள்ளத்தினை சரிசெய்யாவிட்டால் வாகன ஓட்டிகளுக்கு ஆபத்து ஏற்பட

■ ஆழ்வார்குறிச்சியில் மெயின்ரோட்டில் குடிநீர் குழாய் உடைந்ததால் ஏற்பட்டுள்ள ஆபத்தான பள்ளம்.







**Damaged 450mm DI Pipe leak was rectified and water supply effected on 10.06.2026 under CWSS to 163 habitations in Tenkasi district.**

## Action taken on the Water supply issues reported

| Date | District | Name of the Newspaper | Issues published |
|---|---|---|---|
| 11.06.2026 | NAMAKKAL | DINAMALAR | Leaked water flowing along the road |



காலைக்கதிர் 11 JUN 2026

# குழாய் உடைந்து சாலையில் ஓடும் குடிநீர்

**வெண்ணந்துார், ஜூன் 11**

வெண்ணந்துார் ஒன்றியத்துக்கு உட்பட்ட மாட்டுவேலம்படடி பஞ்., பகுதியில், 100க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. இங்கு வீடுகள் மற்றும் அரசு பள்ளி, அரசு மருத்துவமனை ஆகியவற்றுக்கு, காவிரி குடிநீர் குழாய் மூலம் குடிநீர் வினியோகிக்கப்படுகிறது.

இந்நிலையில், ஒ.சவுதாபுரம் நெடுஞ்சாலையில் உள்ள அலவாய் மலை முருகன் கோவில் நுழை வாயில் பகுதி அருகே, குடிநீர் குழாய் உடைந்து தண்ணீர் வீணாகி சாலையில் வழிந்தோடுகிறது.

குடிநீர் குழாய் உடைந்த பகுதியில் பள்ளம் ஏற்பட்டதில் குப்பைகள் தேங்கி உள்ளது. இதனால், அவ்வழியே செல்லும் வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் அவதிப்படுகின்றனர். இதனால் போக்குவரத்து பாதிப்பு ஏற்படுவதுடன், தினமும் குடிநீர் வீணாகி வருகிறது. மாட்டுவேலம்பட்டி பஞ்., ஆறமரத்தம்பாளையம் பகுதியில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக குடியிருப்பு மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, குடிநீர் குழாய் உடைப்பை சீரமைத்து, குடிநீர் வினியோகிக்க மாட்டுவேலம்படடி பஞ்., நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

■ வெண்ணந்துார் ஒன்றியம், மாட்டுவேலம்பட்டி பஞ்., ஆறமரதம்பாளையம் பகுதியில் குடிநீர் குழாய் உடைந்து வீணாகும் குடிநீர்.







**Damaged 63 mm HDPE Pipe leak was rectified and water supply effected on 11.06.2026 under Rasipuram CWSS (New) in Namakkal district.**

## Action taken on the Water supply issues reported

| Date | District | Name of the Newspaper | Issues published |
|---|---|---|---|
| 11.06.2026 | DINDIGUL | DINAKARAN | Dungen that traps motorist in accident in Suttachinnampet of Reddiyarchatram |



ரெட்டியார்சத்திரம் கட்டசின்னாம்பட்டியில்


# வாகன ஓட்டிகளை விபத்தில் சிக்க வைக்கும் பள்ளம்

## விரைந்து மூட கோரிக்கை

ரெட்டியார்சத்திம் அருகே காமாட்சிபுரம் ஊராட்சி கட்டசின்னாம்பட்டி பகுதியில் விபத்தை ஏற்படுத்தி வரும் பள்ளம்.

ரெட்டியார்சத்திரம், ஜூன் 11: ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திற்குட்பட்டது ஸ்ரீ ராமபுரம், காமாட்சிபுரம், கோட்டைபட்டி, கட்டசின்னாம்பட்டி, கோட்டையூர். இப்பகுதிகளுக்கு காவிரி கூட்டுக் குடிநீர் சப்ளை செய்ய காமாட்சிபுரம். ஊராட்சி எல்லப்பட்டி மேட்டு பகுதியில் பைப் லைன் கேட்வால் அமைக்கும் பணிகள் கடந்த பல மாதங்களுக்கு முன்பு நடந்தன. இப்பணிகள் முடிந்த பின் தோண்டிய பள்ளத்தை மூடாமல் அப்படியே விட்டு சென்று விட்டனர். இதனால் இரவு நேரங்களில் இப்பள்ளம் தெரியாமல் வாகனஓட்டிகள் அடிக்கடி விபத்தில் சிக்கி வருகின்றனர். கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு ஸ்ரீராமபுரத்தில் இருந்து திண்டுக்கல்லுக்கு டூவீலரில் சென்ற ஒருவர், எதிரில் வண்டி வந்ததால் வழிவிட ஒதுங்கிய போது காவிரி குடிநீர் பைப் தோண்டிய பள்ளத்தில் நிலை தடுமாறி விழுந்தார். அவரை அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் லேசான காயத்துடன் மீட்டு சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அதே போல் கடந்த ஜூன் 8ம் தேதி இரவு 8 மணியளவில் ஸ்ரீ ராமபுரத்தில் இருந்து ரெட்டியார்சத்திரத்திற்கு டூவீலரில் வந்த ஒருவர் எதிரில் சரக்கு வாகனம் வந்த போது லைட் வெளிச்சத்தில் தோண்டப்பட்ட பள்ளம் தெரியாமல் தவறி விழுந்து விட்டார். இதில் டூவீலரின் முன்பகுதி லைட் மட்டும் உடைந்து விட்டது. நல்வாய்ப்பாக டூவீலரில் வந்தவருக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை. இந்த தொடர் விபத்துகளால் அப்பகுதியில் நடந்து செல்லும், டூவீலரில் செல்லும் நபர்கள் அச்சத்துடன் கடந்து செல்லும் நிலை உருவாகியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விபத்திற்கு வழிவகுக்கும் பள்ளத்தை உடனடியாக மூடி சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் அப்பகுதி மக்கள், வாகன ஓட்டிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




**Damaged 150mm DI & 110mm HDPE Pipe leak was rectified and water supply effected on 11.06.2026 under RAMNAD CWSS in Dindigul district.**

## Action taken on the Water supply issues reported

| Date | District | Name of the Newspaper | Issues published |
|---|---|---|---|
| 12.06.2026 | THIRUVARUR | DINATHANTHI | Leaked water due to damaged pipeline |



கோட்டூர் அருகே குழாய் உடைந்து குடிநீர் வெளியேறுவதையும், அதில் ஒருவர் குளிப்பதையும் படத்தில் காணலாம்.

கோட்டூர் அருகே

# குழாய் உடைந்து வீணாகும் குடிநீர்

## சரி செய்ய கிராம மக்கள் கோரிக்கை

கோட்டூர்,ஜூன்.12-

கோட்டூர் அருகே குழாய் உடைந்து குடிநீர் வீணாகி வருகிறது. இதை சரி செய்ய கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**குழாய் உடைப்பு**


திருவாரூர் மாவட்டம் கோட்டூர் ஒன்றியம் வடக்கு வட்டார் கிராமத்தில் சாலையோரத்தில் கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தின் குழாய் அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழாய் உடைந்து தண்ணீர் வெளியேறி வருகிறது. இவ்வாறு குழாய் உடைந்து பல நாட்களாக லட்சக்கணக்கான லிட்டர் தண்ணீர் வெளியேறி அந்த பகுதியில் உள்ள வயல்களுக்கு சென்று வீணாகிறது.

குழாயில் இருந்து வெளியேறும் குடிநீர் அந்த பகுதியில் உள்ள குழந்தைகள் குளித்து வருகின்றனர். கோடை காலத்தில் பல கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு பொதுமக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

**வீணாகும் குடிநீர்**

குடிநீருக்காக பல்வேறு போராட்டங்களில் பொது மக்கள் ஈடுபட்டு வரும் நிலையில் வடக்கு வட்டார் கிராமத்தில் கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்ட குழாய் உடைந்து தண்ணீர் வெளியேறி வீணாவது வேதனை அளிப்பதாக கிராம மக்கள் தெரிவித்தனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குழாய் உடைப்பை சரி செய்து குடிநீர் வீணாவதை தடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




**Air valve leak in 300mm pipeline was arrested and water supply effected on 11.06.2026 under CWSS to 667 habitations in Thiruvarur district**

# Action taken on the Water supply issues reported

| Date | District | Name of the Newspaper | Issues published |
|---|---|---|---|
| 12.06.2026 | THENI | DINAKARAN | Drinking water wasted due to pipe burst |



சின்னமனூர் அருகே

தினகரன் 11/06/26.

## குழாய் உடைந்து வீணாகும் குடிநீர்

அதிகாரிகள் கவனிப்பார்களா?


சின்னமனூர் அருகே குழாயில் உடைப்பு ஏற்பட்டு வீணாக செல்லும் குடிநீர்.

**சின்னமனூர், ஜூன் 11:** சின்னமனூர் அருகே வேப்பம்பட்டி காமாட்சிபுரம் இடையே குடிநீர் சப்ளையாகும் மெயின் குழாய் உடைப்பு ஏற்பட்டிருப்பதால் குடிநீர் வீணாகி வருகிறது. இதனால் பொதுமக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

தேனி மாவட்டம், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்தில் 14 கிராம ஊராட்சிகள் உள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும், குடிநீர் வழங்குவதற்காக அதற்காக முல்லை பெரியாற்றுப் பகுதியில் உறை கிணறுகள் அமைக்கப்பட்டு அங்கிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் வாயிலாக ஒவ்வொரு கிராமப் பகுதிகளிலும் குடிநீர் குழாய்கள் சாலை ஓரங்களில் பதிக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் உறைகிணறுகளில் சேகரமாகும் குடிநீரை சுத்திகரிப்பு செய்து பொதுமக்களுக்கு இரண்டு நாட் கள் அல்லது மூன்று நாட்க்ளுக்கு ஒரு முறை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இதற்கிடையில். சின்னமனூர் அருகே வேப்பம்பட்டி மற்றும் காமாட்சிபுரம் கிராம ஊராட்சிகள் உள்ளன. இந்த கிராம ஊராட்சி வழங்கப்படும் குடிநீர் மெயின் குழாய் காமாட்சிபுரம் வேப்பம்பட்டிக்கு இடையே கடக்கிறது. தற்போது சில நாட்களாக குழாயில் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வெளியேறி வீணாகி வருகிறது.

இது குறித்து அதிகாரிகளிடம் பொதுமக்கள் கூறியும், அதிகாரிகள் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறப்படுகிறது. ஏற்கனவே குடிநீர் பற்றாக்குறை இருப்பதால் இரண்டு, மூன்று நர்ட்களுக்கு ஒரு முறை கூட குடிநீர் கிடைக்காமல் பொதுமக்கள் அவதி அடைந்து வருகின்றனர்.இந்நிலையில், வேப்பம்பட்டி காமாட்சிபுரம் இடையே உடைந்திருக்கும் குடிநீர் குழாய் உடைந்துள்ளதால் பொதுமக்கள் மேற்கொண்டு சிரமத்தில் சிக்கி உள்ளனர். எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.




**Damaged 110mm PVC Pipe leak was rectified and water supply effected on 12.06.2026 under Kamatchipuram CWSS in Theni district.**

# Action taken on the Water supply issues reported

| Date | District | Name of the Newspaper | Issues published |
|---|---|---|---|
| 12.06.2026 | KARUR | DINATHANTHI | People protesting on road with empty potes |



தினத்தந்தி

1 2 JUN 2026

அணைக்கரைப்பட்டி பகுதி பொதுமக்கள் குடிநீர் கேட்டு காலிக்குடங்களுடன் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களிடம் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்திய போது எடுத்த படம்.

தோகைமலை அருகே

## குடிநீர் கேட்டு காலிக்குடங்களுடன் பொதுமக்கள் சாலை மறியல்

தோகைமலை, ஜூன்.12-
தோகைமலை அருகே குடிநீர் கேட்டு காலிக்குடங்களுடன் பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

**சாலை மறியல்**

கரூர் மாவட்டம் தோகைமலை அருகே கழுகூர் ஊராட்சி அணைக்கரைப்பட்டி பகுதியில் சுமார் 50-க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. இந்த பகுதியில் கழுகூர் ஊராட்சி நிர்வாகம் சார்பில் போர்வெல் குடிநீர் மற்றும் காவிரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் கடந்த ஒரு மாதமாக காவிரி தண்ணீர் மற்றும் போர்வெல் குடிநீரும் சரிவர வரவில்லை என்று தெரிகிறது. இதுகுறித்து கழுகூர் ஊராட்சி நிர்வாகத்திடம் பலமுறை கோரிக்கை மனுக்கள் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என கூறப்படுகிறது. இதனால் ஆத்திரம் அடைந்த பொதுமக்கள் நேற்று குளித்தலை -மணப்பாறை மெயின் ரோடு அ.உடையாபட்டி பஸ் நிறுத்தத்தில் திடீரென காலிக்குடங்களுடன் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**பேச்சுவார்த்தை**

இதுகுறித்து தகவல் அறிந்த தோகைமலை ஒன்றிய ஆணையர் முத்துக்குமார், தோகைமலை சப்-இன்ஸ்பெக்டர் ரஷ்யா உள்பட அதிகாரிகள் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அப்போது இன்று (அதாவது நேற்று) மாலைக்குள் குடிநீர் வினியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் உறுதி அளித்தனர். இதனையடுத்து சாலை மறியல் போராட்டத்தை கைவிட்டு அங்கிருந்து பொதுமக்கள் கலைந்து சென்றனர். இந்த சாலை மறியல் போராட்டத்தால் குளித்தலை- மணப்பாறை மெயின்ரோட்டில் சுமார் 1 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.




**Due to frequent damages, 200mm PVC Pipeline was replaced with DI and water supply effected on 12.06.2026 under CWSS to 253 habitations in Kulithalai and Thogamalai unions in Karur District**